### நடப்பது ஆட்சியா? கொடூரக் காட்சியா? பத்தே நாளில் பல் இளிக்கிறது

### இந்த ஆட்சியின் இலட்சணம்! சூலூரில் கொலைக்கு உள்ளான

# சிறுமியின் உடலை தாயாருக்குத் தெரியாமலே எரித்த த.வெ.க. அரசு!

## இழவு வீட்டில் ரீல்ஸ் போட்டுக் குதூகலிக்கும் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.!

கோவை, மே.26-

**கோவை மாவட்டம் சூலூரில் 10 வயது சிறுமி கடத்தப்பட்டு பாலியல் கொடுமைக்குள்ளாகி கொடூரமாக கொலை செய்யப்பட்ட நிகழ்வு தமிழ் நாட்டையே அதிர்ச்சி அடைய வைத் திருப்பதுடன், ரீல்ஸ் ஆட்சியின் ரியல் காட்சிகள் எவ்வளவு மோசமாக இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது.**




பத்து நாட்களிலேயே புதிய ஆட்சி யின் நிர்வாக அவலட்சணம் வெளிப் பட்டு இருப்பதுடன் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கின்ற நிலையில், சிறுமி படுகொலையின் பின்னணியில் உள்ள உண்மைகளை மறைக்க ஆட்சி நிர்வாகம் எவ்வளவு மோச மான நிலைக்கு சென்று இருக்கிறது என்பதை சிறுமியின் சித்தி வெளிப் படுத்தி இருக்கிறார்.

இது தொடர்பாக அவர் அளித் துள்ள ஒரு பேட்டியில், பாலியல் கொலை குற்றவாளிகளுக்கு உச்ச பட்ச தண்டனை அளிக்கப்படும் என்று முதலமைச்சர் உறுதியளித் தால்தான் சிறுமியின் உடலை மருத்துவமனையில் இருந்து பெற் றுக் கொள்வோம் என்று அவர்களது குடும்பம் உறுதியாக இருந்தது. மே 23 ஒரு நாள் முழுவதும் முதலமைச் சரிடம் இருந்து எந்த உத்தரவாத மும் அறிவிப்பு வராத நிலையில், அரசு அதிகாரிகள் சிறுமியின் பெற் றோரைக் கட்டாயப்படுத்தி, உடலை வாங்கிக் கொள்ள கையெழுத்து போடுமாறு நெருக்கடி கொடுத்து இருக்கிறார்கள். சிறுமியின் தாய் கடைசி வரை மறுத்துவிட்ட நிலை யில், தந்தையை மட்டும் தனியாக அழைத்துச் சென்று மிரட்டியும், நிதி உதவி உள்ளிட்ட பலன்கள் கிடைக் கும் என்று ஆசை காட்டியும் கையெ ழுத்து வாங்கி, சிறுமியின் உடலை உடனடியாக எரிக்கச் செய்து விட் டார்கள்.

தான் பெற்ற குழந்தையின் உடல் எரிக்கப்பட்டது அந்த தாய்க்கே தெரிய வில்லை. பாலியல் கொடுமைக்குள் ளாகி கொலை செய்யப்பட்டிருக்கிற குழந்தையின் உடலை புதைப்பது தான் சரியாக இருக்கும் என்றும், நாளை விசாரணையில் ஏதேனும் சந்தேகம் வந்தாலும் உடலை மீண் டும் பரிசோதனை செய்வதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்று சிறுமி யின் உறவினர்கள் பலர் தெரிவித் தும், அதிகாரிகள் கொடுத்த நெருக்க டியினால் சிறுமியின் உடலை அவசர அவசரமாக எரித்திருக்கிறார் கள்.

இது குறித்த பகிரங்கமான குற்றச் சாட்டை குழந்தையின் சித்தி ஊட கங்களுக்கு தெரிவித்திருக்கிறார்.

பாஜக ஆட்சி நடைபெறும் உத்தர பிரதேச மாநிலத்தில் ஹத்ராஸ் என்ற ஊரில் 2020ஆம் ஆண்டு ஒரு சிறுமி பாலியல் கொடுமைக்குள் ளாகி கொலை செய்யப்பட்ட நிலை யில், சிறுமியின் பெற்றோர் உடலை வாங்க மறுத்து நீதி கோரியதால், பாஜக அரசின் போலீசாரே சிறுமி யின் உடலை பெட்ரோல் ஊற்றி எரித்து விட்டனர். இதனால் அந்த கொடூர குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து எளிதாக தப்பி விட்டார் கள்.

**உ.பி. பா.ஜ.க. அரசின் பாணியில்!**

உத்தரப்பிரதேச பா.ஜ.க. அரசின் பாணியில், தமிழ்நாட்டில் தவெக அரசு சட்டம் ஒழுங்கை சீரழித்து, உண்மை குற்றவாளிகளை தப்ப வைத்து, நீதியைக் கொன்று எரிக்க முயற்சி செய்கிறது. ஆளுங்கட்சி யின் எம்.எல்.ஏ. உள்ளிட்ட நிர்வாகி கள் சிறுமி குடும்பத்தாரிடம் ஆறுதல் தெரிவிப்பது என்ற பெயரில், ரீல்ஸ் எடுத்து அதற்குப் பின்னணி சேர்த்து பதிவிட்டு, குதூகலம் அடைந்து கொண்டிருக்கிறார்கள்.

பத்தே நாட்களில் பல் இளிக்கிறது இந்த ஆட்சியின் லட்சணம்.

### வந்தவாசி அருகே

# 14 வயது சிறுமியை லாரியில் கடத்திச் சென்று கூட்டுப் பாலியல் வன்கொடுமை!

## அண்ணன் - தம்பி உள்பட 3 பேர் 'போக்சோ' சட்டத்தில் கைது!

திருவண்ணாமலை, மே 26-

திருவண்ணமை மாவட் டம் வத்தவாசியில், 14 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி லாரியில் அழைத்து சென்று கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக அண்ணன், தம்பி மற்றும் சிறுமியை அழைத்து செல்வதற்கு உடந்தையாக இருந்த டிரை வரின் மனைவி ஆகிய 3 பேரை போக்சோ சட்டத் தின் கீழ் போலீசார் கைது செய்தனர்.

இதுபற்றி போலீஸ் தரப் பில் கூறப்பட்டதாவது:-

போளூர் தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 14 வயது சிறுமி. அவரது தாய் மற்றும் தந்தை மாதம்தோறும் வந்தவாசி சேத்துப்பட்டு சாலையில் உள்ள சைதானி பீவி தர்கா விற்கு வந்து செல்வார்க ளாம். இதேபோல் ராணிப் பேட்டை மாவட்டம் ஆற்காடு பகுதியைச் சேர்ந்த பாத்திமா (30) என்பவரும். மாதாமாதம் இந்த தர்கா விற்கு வருவாராம்.

இந்த நிலையில் தர்கா விற்கு வந்திருந்த 14 வயது சிறுமியிடம் பாத்திமா விற்கு பழக்கம் ஏற்பட்டது. அப்போது பாத்திமா 14 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி ஆற்காட் டிற்கு பேருந்தில் அழைத்து சென்றதாக கூறப்படுகிறது.

பின்னர் பாத்திமாவின் கணவர் இம்ரான்பாஷா (35), அவரது தம்பி கிளீனர் அஜ்மல் பாஷா (30) ஆகிய இரண்டு பேரும் 14 வயது சிறுமியிடம் ஆசை வார்த்தை கூறி லாரியில் ஆற்காடு பகுதியில் இருந்து பெங்களூருக்கு அழைத்து சென்றதாக கூறப்படுகிறது.

அப்போது, லாரியில் பெங்களூர் செல்லும் வரை 2 பேரும் சேர்ந்து சிறுமி யிடம் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறப்படுகிறது. லாரி பெங் களூர் பகுதிக்கு சென்று நின் றவுடன் லாரியில் இருந்து சிறுமி இறங்கினார். அப் போது அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் 2 பேரும் சேர்ந்து தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறினார். உடனே பொது மக்கள் அந்த இரண்டு பேரையும் பிடித்து தர்ம அடி கொடுத்து பெங்களூர் போலீசாருக்கு தகவல் தெரி வித்தனர்.

அங்கு போலீசார் வந்து சிறுமியை மீட்டு காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை செய்தனர். அப்போது பெங்களூர் போலீசர் சிறுமியிடம் "எங்கு இருந்து உன்னை இவர்கள் அழைத்து வந்த னர்" என்று கேட்டனர்.

அப்போது அந்த சிறுமி வந்தவாசி பகுதியில் இருந்து என்னை அழைத்து வந்தனர் என்று கூறியிருக்கிறார். இதையடுத்து பெங்களூர் போலீசார் வந்தவாசி காவல் நிலையத்திற்கு தக வல் தெரிவித்துள்ளனர்.

பின்னர் பெங்களூர் போலீ சார், சிறுமியை மகளிர் பாதுகாப்பு இல்ல விடுதியில் பொதுமக்கள் உதவியுடன் தங்க வைத்தனர். இதனைத் தொடர்ந்து பெங்களூர் போலீசார் அங்கு வழக்குப் பதிவு செய்தனர்.

இதையடுத்து வந்தவாசி போலீசார் சென்று சிறு மியை அழைத்து வந்து வந் தவாசி காவல் நிலைய த் திற்கு வழக்கை மாற்றினர்.

பின்னர் வந்தவாசி போலீசார், 14 வயது சிறு மியை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்ததாக இம்ரான் பாஷா மற்றும் அவரது தம்பி அஜ்மல் பாஷா, சிறுமியை அழைத்து செல்வதற்கு உடந்தையாக இருந்த இம்ரான் பாஷா வின் மனைவி பாத்தியா ஆகிய மூன்று பேரையும் கைது செய்து வந்தவாசி நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

பின்னர் 3 பேரும் வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும் லாரியையும் போலீ சார் பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் அந்த பகுதி யில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### தஞ்சை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# எம்.ரெங்கசாமியின் தாயார் திருமதி. ஜெயலட்சுமி அம்மாள் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே.26-

தஞ்சை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ரெங்கசாமியின் தாயார் திருமதி. ம.ஜெயலட்சுமி அம்மாள் அவர்கள் கடந்த 23.5.2026 - சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

இம்மறைவுச் செய்தியறிந்து துயருற்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரி மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை, முன்னாள் எம்.எல்.ஏ., எம்.ரங்கசாமி மற்றும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் தொடரும் அறிவிக்கப்படாத

# மின்வெட்டைக் கண்டித்து பொதுமக்கள் போராட்டம் - சாலை மறியல்!

## மின்வாரியத்தை குறைகூறும் அமைச்சர்!

சென்னை, மே 26-

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் தொடரும் அறிவிக்கப்ப டாத மின்வெட்டைக் கண் டித்து பொதுமக்கள் ஆங் காங்கே போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எம்.எல்.ஏ. ஊரில் இல்லை என சொன்னவர்தான் எம். எல்.ஏ. என்பதை அறியா மல் ஏமாந்து சென்ற சம்ப வம் இணையதளங்களில் பரவி வருகிறது.

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி அமைந்த பின் மாநி லம் முழுவதும் முழுவதும் அறிவிக்கப்படாத தொடர் மின்வெட்டு நிலவி வருகி றது. அதிகாரிகளின் மெத்த னப் போக்கும், முறையான கண்காணிப்புகளும் பொறுப்புக்களும் இல்லா ததே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது. அறி விக்கப்படாத மின்வெட்டு காரணமாக சென்னை உட் பட பல்வேறு மாவட்டங்க ளில் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின் றனர்.

சென்னையில் சில இடங் களில் மின்வாரிய அலுவல கங்களை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டங் களில் ஈடுபட்டு வருகின்ற னர். இப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டிய மின்துறை அமைச்சர் நிர்மல்குமார், அரசுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் மின்வாரியத்தில் உள்ள ஒரு சில கருப்பு ஆடு கள் திட்டமிட்டு மின்த டையை ஏற்படுத்துவதாக பொறுப்பின்றி பதிலளித் துள்ளார்.

திறனற்ற த.வெ.க. அர சின் செயல்பாடுகள் தற் போது சமூகவலைத்தளங்க ளில் கிண்டலாக மாறி வருகிறது. தொடர் மின் வெட்டுன்னு ஒரு கூட்டம் கிளம்பி எம்.எல்.ஏ. வீட் டுக்கு போய் சவுண்ட கொடுத்துருக்காங்க, அப்பு றம் ஒருத்தர் வெளியே வந்து எம்எல்ஏ ஊர்ல இல் லைன்னதும் கலைஞ்சு போயிட்டாங்க...

வந்து சொன்னவர்தான் எம்எல்ஏன்னு மக்களுக்கு தெரியவில்லை. மூஞ்ச பாத்து ஒட்டு போட்டு ருந்தா தெரிஞ்சுருக்கும் பாவம் என சமூகவலைத்த ளங்களில் பலர் கிண்டலாக பதிவிட்டு வருகின்றனர்.



நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில், குன்னூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம். ராஜ் குன்னூர் ஒன்றியம் மற்றும் உலிக்கல் பேரூர் கழகப் பகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் சென்று வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

# கோவையில், 10 வயது சிறுமி கொலைக்கு நீதி வேண்டும்!

## தஞ்சையில் மெழுகுவர்த்தி ஏந்தி பொதுமக்கள் மவுன அஞ்சலி!

தஞ்சை, மே 26

கோவையில், 10 வயது சிறுமி கடத்தி கொல்லப் பட்ட சம்பவத்திற்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி, தஞ்சையில், ஆயிரத்து 8 அகல் விளக்குகளில் தீபம் ஏற்றியும், 100க்கும் மேற் பட்ட பெண்கள் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தியும் மவுன அஞ்சலி செலுத்தினர்.

கோவையில் 10 வயது சிறுமியை கடத்தி பாலியல் துன்புறுத்தலுக்கு உள் ளாக்கி கொலை செய்யப் பட்ட சம்பவம் நாட் டையே உலுக்கி உள்ளது. இச்சம்பவம் தொடர்பாக இரண்டு பேரை காவல் துறையினர் கைது செய்துள் ளனர். இந்த நிலையில்,

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி, தஞ்சை மாவட்டம் நாஞ்சிக் கோட்டை சாலையில், ஆயி ரத்து 8 அகல் விளக்குகளில் தீபம் ஏற்றியும், கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தியும், 100க்கும் மேற்பட்ட பெண் கள் மலர் தூவி மவுன அஞ் சலி செலுத்தினர்.

### கோயில்களில் த.வெ.க.வினர்

# ஆய்வு நடத்தி புகைப்படம் அனுப்ப வேண்டும்!

## அறநிலையத்துறை அமைச்சர் அறிவுறுத்தியதால் சர்ச்சை!

சென்னை, மே 26

த.வெ.க. ஆட்சிக்கு வந்த இரண்டு வாரங்கள் கூட ஆகாத நிலையில், நாளுக்கு நாள் புதுப்புது பிரச்சனைகள் வெடித்து வருகிறது. ஒரு புறம் தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்கு கேள்விக்குறியாகி கொலை, கொள்ளை சம்ப வங்கள் அதிகரித்து வருகி றது.


மறுபுறம் த.வெ.க. அமைச்சர்கள் மற்றும் நிர் வாகிகளின் செயல்களால் மக்கள் முகம் சுளித்து வரு கின்றனர். இந்நிலையில், கோயில்களில் த.வெ.க. வினர் ஆய்வு நடத்தி புகை ப்படம் அனுப்புமாறு அற நிலையத்துறை அமைச்சர் ரமேஷ் அறிவுறுத்தியதால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

கோயில்களில் பிரசா தம் வழங்கப்படுவது குறித்து தவெகவினர் ஆய்வு நடத்தி புகைப்ப டம் அனுப்புமாறு தனது கட்சியினருக்கு அமைச்சர் ரமேஷ் உத்தரவிட்டுள் ளார். ஏற்கனவே, ஆய்வு என்ற பெயரில் த.வெ.க. வினர் பல்வேறு பகுதி களில் அத்துமீறுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டி வரும் நிலையில், புதிதாக முளைத்துள்ள இந்த விவகாரம் சர்ச் சையை ஏற்படுத்தியுள் ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தூத்துக்குடி என். பெரியசாமி

### மே 26 (2017)



ஒன்றுபட்ட நெல்லை மாவட்டத்தில் 1960ஆம் ஆண்டு முதல் கழக உறுப்பினராக பதிவு செய்து கொண்ட இவர், தொடர்ந்து தூத்துக்குடி நகருக்கு உட்பட்ட வட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, பின்னர் மாவட்டக் கழக பிரதிநிதியாக 1977ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். அதனைத் தொடர்ந்து 1982 முதல் 1987 வரை தலைமைப் பொதுக்குழு உறுப்பினராகவும், அதன்பின்னர், தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளராக 1987 முதல்.தொடர்ந்து தனது இறுதி காலம் வரை தலைவர் கலைஞர் அவர்களின் தடம் மாறாத தொண்டராகப் கழகப் பணியாற்றியவர். கழகப் பணிகளோடு, தொழிலாளர் நலனினும் அதிக அக்கறை கொண்ட இவர் தூத்துக்குடி மாவட்டத்தில் 36 தொழிற் சங்கங்களில் தலைவராக இருந்தவர்.

தூத்துக்குடி நகர்மன்றத் தலைவராகவும் – 1989,1996 ஆண்டுகளில் நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று, இரு முறை சட்டப்பேரவை உறுப்பினராகப் பணியாற்றினார்.

1993ஆம் ஆண்டு கழகத்திற்கு சோதனை வந்த காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்தை கழகக் கோட்டையாக காத்து நின்றவர். கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் மேல் கொண்ட அளவு கடந்த பற்றின் காரணமாக, தலைவர் கலைஞர் அவர்களே, இவரை "என்னுடைய முரட்டு பக்தன்" என்று மனமாரப் பாராட்டியவர். 2016ல் தலைமைக் கழகத்தின் சார்பில் வழங்கப்படும் கலைஞர் விருதினை தலைவர் கலைஞர் அவர்களால் பெற்றவர். "என் மீது தனிப்பட்ட பாசத்தையும் வைத்திருந்தவர் அண்ணன் தூத்துக்குடி பெரியசாமி அவர்கள் என்பதை நினைக்கும் போது, பெருமைமிக்க தொண்டரை இழந்த சோகம் எங்களை உலுக்கிக் கொண்டிருக்கிறது." என்று கழகச் செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**